
பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119 09—04—1993
இதழ்: 07 விலை ரூபா 7-00

பாஸ்கா சிறப்பு மலர்

## யாழ். ஆயரின் ஈஸ்ரர் வாழ்த்து



பல இன்னல்கள் மத்தியில் சுமக்கமுடியா பளுக்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் தவக்காலத்தை அனுசரித்து, பாஸ்கா மறையுரைகளை தியானித்து, மனமாற்றம் என்னும் அருளைப்பெற்று — பரிசுத்தவாரத்தில் பங்குபற்றியுள்ளோம். ''அப்பத்தை பிட்கையில் உயிர்த்த ஆண்டவனைக் கண்டு'' கொண்ட சீடர்களைப் போன்று இன்று அவதியுறும் மக்களுடன் பகிர்ந்து வாழும் வாழ்வினால் உயிர்த்த கிறிஸ்துவின் மகிழ்ச்சியில் பங்குபெறுகிறோம் என்ற நம்பிக்கையில் உங்கள் அனைவருக்கும் எனது இனிய ஈஸ்ரர் வாழ்த்துக்களை கூறி நிற்கிறேன்.

+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
-7-4-1993
யாழ்ப்பாணம்

# சத்தியத்திற்கு அவனே சாட்சி

உன் சக்தியை
அழிக்கும்
சர்வேசுரன்
மகன் நான்!

கல்லறை
நான்
சிறு துயில் கொள்ளும்
கட்டில்.

மூன்று நாளில்
முற்றிலும் புதியவனாய்த்
தோன்றுவேன்!
தோல்வி உனக்கே.

கூறினான் ஒருவன்
குறித்துக் கொள்ளுங்கள்
அவன் பேர்
கிறிஸ்து யேசு.


தச்சனின் மகன்
தன்னை முழுமையாய்
நமக்குத் தந்தவன்!
பித்தனாய் பராரியாய்,
காணப்பட்டவன்
அச்சத்தை
அநாதையாக்கிவிட்டு
அரசாங்கத்தையே
எச்சரித்தவன்.

ஏரோதன்
பிலாத்து
உச்சரித்த
எச்சரிக்கைகளை
துச்சமாகத் தள்ளிவிட்டு
நிச்சயம் நானே
நித்தியன் என்று
நிறுவியவன்.

'யதார்த்தவாதி
வெகுஜன விரோதி'
சந்தர்ப்பவாதிகள்—அவன்
சத்துருக்களாம்.

தத்துவம் இதனைத்
தன் வாழ்வில் கண்ட
வித்தகன் யேசு
விலகி ஒதுங்கவில்லை.

நல்லதைச் செய்ய
நாள் பார்க்கவேணுமா?
கோயில்கள்
வியாபாரிகளின்
கூடாரமா?
நோன்பும் ஜெபமும்—மக்கள்
காண்பதற்காகவா!
நீதியை
நிமிர்ந்து நின்று
கேட்டான்
காது இனிக்கவல்ல
கய்க்கவே—புது
வேதம் சொன்னான்.





சிலுவை ஊடாக

மீட்பு

கேட்டவர்கள்
அவனை
இரண்டாகக்
கிழிக்கப் பார்த்தார்கள்
கூட்டம் போட்டுக்
குற்றப் பத்திரிகை
வாசித்தார்கள்
கடைசியாக
கூண்டிலேயே ஏற்றினார்கள்.
காட்டிக் கொடுக்க
ஒருவன்
கையில் கிடைத்தான்
தீட்டினார்கள் கத்தி.

சனங்களின் நெஞ்சைக்
காந்தமாய் இழுத்தவன்
சனங்களின் நெஞ்சில்
தவிசு அமைத்தவன்
மனங்கோணிய சனங்களால்
மறுக்கப்பட்டனன்.

பாடுகளே
அவன் பாதை—
ஆடு தன்னை
அப்படியே விழுங்க
ஓநாய்கள்
நாடு முழுவதும்
இருப்பதை
அவன் நன்கறிவான்.

சத்தியத்திற்கு
அவனே சாட்சி
சித்தன் அவன்
சிலுவைப் பாதையில்
தெரிந்துகொண்டே நடந்தான்.
சின்ன மனிதர்கள்
அதனைக் கண்டு
சித்தம் குழம்பினார்கள்.

மரணத்திற்கு
அவனால் தான்
மரியாதையே கிடைத்தது.

மரணம்—அதை
அவன்
தழுவியபோது

பூமி
பூகம்பமாக வெடித்தது.
'சாமி நீ தான்'
இயற்கை
சத்தியம் செய்தது!

— வாகரைவாணன்

## எம் கருத்து

# கல்லறைகள் வெற்றியின் சின்னங்கள்

"முதலும் இறுதியும் நானே. வாழ்பவரும் நானே. சாவுக்குட்பட்டேனாயினும் இதோ நான் என்றென்றும் வாழ்கிறேன்." (திருவெளி. 1:17-18)

33வது வயதிலே சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்த இயேசுவின் வார்த்தைகள் இவை.

அதே உயிர்த்த இயேசு ஒவ்வொரு மனிதனின் வாழ்வினூடாகவும், மனித இனத்தினதும் தேசிய இனங்களினதும் வரலாற்றினூடாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

2000 வருடங்களாக எல்லாத் தலைமுறைகளும் கிறிஸ்துவின் கல்லறைக்குமுன் அதே செய்தியைக் கேட்கின்றனர் :

"உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன்? அவர் இங்கே இல்லை; உயிர்த்துவிட்டார்."

(லூக். 24 : 5)

சாவின் மீதும், சாவின் ஆட்சியின்மீதும் கிறிஸ்துவுக்கு அதிகாரம் உண்டென்பதற்கு இவ் வெறுமையான கல்லறை சாட்சியம் கூறுகிறது.

அன்று தேவ வல்லமையால் திறக்கப்பட்ட, வெறுமையான, கற்பாறையில் குடைந்த கல்லறை முன் நின்று அழுதார்கள் ஒரு சில பெண்கள். இன்றோ, எதிரியின் துரோகச் செயலின் விளைவினால் அமைக்கப்பட்டு தகர்க்கப்பட்ட, அழிக்கப்பட்டு அவமதிக்கப்பட்ட, சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட, கற்பனையால் வரைந்த கல்லறைகள் முன் ஒரு தேசிய இனமே புலம்புகின்றது.

அன்றுபோல் இன்றும், ஒவ்வொரு கல்லறை முன்னும் மனிதன் ஒரு கேள்வியை எழுப்புகிறான்: "ஏன் இந்தச் சாவு?" இக்கல்லறைகள் போரினால் உண்டான வன்செயலினதும் அழிவினதும் கொடிய சூறாவளியின் விளைவுகளாயின், இக்கேள்வி மனித சமுதாயத்தால் கேட்கப்படவேண்டிய தொன்றாகும். இன்னும் இக்கல்லறைகள் அடிப்படை மனித உரிமை மீறல்களினதும், அடாவடித்தனமான திட்டமிட்ட நாசகார, சதிச் செயல்களினதும் விளைவுகளாயின், "ஏன் இந்தச் சாவு?" எனும் கேள்வி சகல தேசிய இனங்களாலும் சர்வதேச மட்டத்தில் எழுப்பப்பட வேண்டியதொன்றாகும்.

இவ்வேளையில், பரிசுத்த தந்தை 2ஆம் அருள் சின்னப்பர், இரண்டாம் உலகயுத்த அனர்த்தங்களை மனதில் வைத்து, 1985ஆம் ஆண்டு இயேசு உயிர்த்த ஞாயிறு அன்று வத்திக்கான் புனித இராயப்பர் சதுக்கத்தில் நின்ற இரண்டு லட்சம் மக்களுக்குக் கூறிய கருத்துக்களை நினைவு கூரல் நலமாகும் :

புதிய இலட்சியத்திற்காக, மனித மாண்பின் மேன்மைக்காக, அடிப்படை மனித உரிமைகளுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணம் செய்து, தம் உயிரை நீத்தவர்கள் — இவர்கள் ஆண், பெண்ணாயிருக்கலாம்; குழந்தைகள் — வயோதிபர்களாயிருக்கலாம்; இளைஞர் — முதியோராயிருக்கலாம்; எந்த இனத்தவர், எந்த நிறத்தவர், எந்த மதத்தினராயும் இருக்கலாம் — எவராயிருந்தாலும் இவ்விதம் தியாகம் செய்தவர்களை நாம் மறக்கமுடியுமா?

இவர்களில் சிலர் பாதுகாப்பற்ற, குற்றமற்ற பலியாட்கள்; ஏனையோர் மக்களின் சுதந்தர வாழ்வை ஆயுதம் ஏந்தி பாதுகாக்கும்பொழுது தங்கள் உயிரை பெருங்களப் பலியாக ஒப்புக்கொடுத்தவர்கள்

வன்செயல்களை வன்முறையாலோ, வெறுப்பை வெறுப்பதினாலோ ஈடு செய்வதற்காக இவர்கள் போர்புரியவில்லை. மாறாக, தங்களதும் மற்றவர்களதும் சுதந்திரத்தையும் உரிமையையும் உறுதிப்படுத்துவதற்காக இவர்கள் போர் புரிந்தார்கள். இக்காரணத்தால் இவர்கள் தியாகிகள், மாவீரர்கள். இதுதான் அவர்களின் எதிர்ப்பு.

மேற்கூறிய கருத்துக்கள் இன்றும் எம் நிர்ப்பாக்கிய நிலமைக்குப் பொருந்தும்.

ஆகவே இக்கல்லறைகள், அடிமைத்தனத்திலிருந்து நாம் பெறும் விடுதலையின் வெற்றிச் சின்னங்களே!.

## திருமறை அறிவை வளர்ப்போம்

# இயேக்கிறிஸ்து நாதர் மனுக்குலத்தின் மீட்பர்

1. இயேசு பெத்லகேம் நகரில் இஸ்ராயேல் குலத்தில் பிறந்தார். அவரது தாயாகிய மரியாள், கன்னியாக இருந்தும் புதுமையான விதத்தில் அவரைக் கருத்தரித்தாள். தமது வாழ்வின் பெரும்பாகத்தை நசரேத் என்னும் சிற்றூரில் மௌனத்திலும் சாதாரண வேலைகளிலும் கழித்தார்.

2. அவருக்கு முப்பது வயதானபோது தமது நாட்டவருக்கு அதிகாரத்துடன் பகிரங்கமாகப் போதிக்கத் தொடங்கினார். "இறைவன் உங்களை மனந்திரும்புமாறு கேட்கிறார். அவரை விசுவசித்து அவரது அரசில் சேருங்கள்" என்று அவர்களுக்குக் கூறினார். (மத். 4:17) அவரது போதனை ஆன்மீக மறுமலர்ச்சிக்கு வற்புறுத்தலான ஓர் அழைப்பாக இருந்தது. அத்துடன் விடுதலை, மகிழ்ச்சி ஆகியவற்றின் உறுதிமொழியாகவும் இருந்தது.

இயேசுவின்வழியாக இறைவன் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி, அவர்களைத் தம்மோடு நெருங்கிய ஐக்கியத்துக்கு அழைக்கிறார். அதன் பயனாக ஒவ்வொரு மனிதனும் பரிபூரண இன்பத்தை அடையும் அபிலாஷையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடும்.

3. இயேசு, தாழ்மையுள்ளவர்கள், உள்ளத்தூய்மையும் நேர்மையுமுடையவர்கள், இரக்கமுடையவர்கள், நீதியுள்ளவர்கள், சமாதானத்தை விரும்புகிறவர்கள் ஆகியோர் பேறுபெற்றவர்கள் என்று கூறினார். ஆனால், பெருந்தியாகத்தைச் செய்தாவது எல்லாவிதமான பாவங்களையும் துணிவோடு முற்றாக விட்டு விடவேண்டும் என்பது அவரது நிபந்தனை: "ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்கு வரும் பயனென்ன?" (மத் 16 : 26) தமது சீடர்கள் கடவுள் முன் தாழ்ச்சியுடையவர்களாய், ஒவ்வொரு மனிதனையும் தம் சகோதரனாகக் கருதி, இறைவன் ஒவ்வொருவரையும் உண்மையாக மன்னிக்க ஆயத்தமாக இருக்க வேண்டுமெனக் கூறுகிறார். இவ்வாறு அவர் அனைவருக்கும் நம்பிக்கையூட்டி, அனைவரும் இறைவனை நம்பிக்கையோடு நோக்க வழி செய்கிறார்.

4. அவர் அன்றாட வாழ்வின் துன்பதுயரங்களை அனுபவித்தார், உழைப்புக்கும் குடும்ப வாழ்வுக்கும் மகத்துவத்தையும் நன்மதிப்பையும் அளித்தார். ஆண் பெண் சமத்துவத்தை அறிவித்தார். குழந்தைகளிடம் விசேட அன்பு பாராட்டினார். தமது நண்பர்களை நேசித்தார். தமது தேசத்தின் மட்டில் பற்றுடையவராக இருந்தார். தமது மரணத்துக்கு முன் தமது போதனைகளின் சாராம்சமாக அவர் தம் சீடர்களுக்குக் கூறியது: "நான் உங்களுக்கு அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள். நீங்கள் ஒருவர் மீதொருவர் அன்பு கொண்டிருந்தால் தான் நீங்கள் என் சீடர் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள்." (அரு 13 : 34, 35)

5. தம்மைச் சூழ இருந்த மக்களின் துன்பங்களைக் கண்டு அவர் கொண்ட இரக்கமும், தம்மிலேயிருந்த இறைவனின் மீட்கும் பிரசன்னத்தை வெளிப்படுத்த அவர் கொண்ட ஆவலும் அநேக புதுமைகள் செய்யுமாறு அவரைத் தூண்டின. பிறவிக் குருடரையும், முடவரையும், திமிர்வாதக்காரரையும் அவர் குணப்படுத்தினார். சிலரை சாவிலிருந்து உயிர்ப்பித்தார். இச்செயல்களின் மூலம் தாம் உண்மையில் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதை மக்களுக்கு காட்ட விழைந்தார்.

6. இயேசு தமது சீடர்களுக்கு தம்மையும் தமது பணியையும் பற்றி அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதை மட்டுமே கூறினார். ஆனால் தமது மரணத்தின்பின் அவர்களுக்குத் தூய ஆவியை அனுப்புவதாகவும் அவரே அவர்களை முழுமையான ஞானத்திற்கும் உண்மைக்கும் இட்டுச்செல்வார் எனவும் [illegible]களித்தார்.

இயேசு கடவுளைத் தமது தந்தையென்றும், தம்மை மகனென்றும் குறிப்பிட்டார். தாம் தந்தையால் அனுப்பப்பட்டவரென்றும், வல்லமையில்

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

## மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 4. உறவுகள்

4.1 சமூக வாழ்வு என்பது பல உறவுகளின் இடைவினையால் ( Interaction ) விளைவது. குடும்பம், நட்பு, பள்ளி கூடம், தொழில் நிலையம், சமூக சமய அமைப்புகள் என விரியும் புலங்களிடை பற்பல உறவுகள். இந்த உறவுகளிடை ஒரே மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை தாங்கவேண்டிய நிலை. இந்த பாத்திரங்கள் பற்றிய சமூக எதிர்பார்ப்புகள், பண்புகள் பல. ஒவ்வொரு பாத்திரமும் சிறப்பான இயல்புகளை வேண்டி நிற்பன.

இந்தப் பாத்திரங்களை நன்கு புரிந்து கொண்டு, இடைவினைக்குள்ளாகும் போது உறவு நிலை சீராக அமையும்.

எனினும் இந்த புரிந்துகொள்ளலும், புரிந்தவாறு நடந்து கொள்ளலும் சாத்தியமாக, உறவில் தொடர்புபடும் எல்லோரிடத்தும் இத்தகைய தெளிவு வேண்டப்படும்.


இந்த தெளிவினை எந்தளவுக்கு பெற்றுக்கொள்கின்றோமோ அந்த அளவிற்கு சமூக வாழ்வு இலகுவாகும் என்பதனை இன்றைய சமூக, உளவியல் ஆய்வுகள் காட்டிநிற்கும்.

4.2 ஒருவர் பாத்திரத்தை மற்றவர் புரிதல் என்பது போலவே ஒருவன் தன் வாழ்விடை சந்திக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை புரிதலும், அவற்றிடை சந்திக்கும் முரண்பாடுகளை தெளிதலும் அவசியமாகின்றது. குடும்ப நிறுவனத்துக்குள்ளேயே அன்னைக்கு மகனாக, மனைவிக்கு கணவனாக, பிள்ளைக்கு தந்தையாக என்று வேறுபட்ட பாத்திரங்கள். குடும்பத்துக்கு வெளியே, பள்ளிக்கூடத்தில் மாணவன், தோழன் என விரியும் உறவுகள், தொழில் நிலையங்களில் பலவேறு படி நிலைகளில் பாத்திரங்கள்.

நவீன வாழ்வில் இவ்வாறான உறவுகளின் எண்ணிக்கையும் வேறுபாடுகளும் அதிகரித்துச் செல்வன. புதிய புதிய பாத்திரங்களையும், அவற்றுக்கான திறன்களையும், கடமைகளையும் தரும் மாற்றங்களிடை ஒரு தனியனின் வாழ்க்கை, முன்னைய எளிமையான சமூகங்களைவிட இன்று சிக்கல் மிகுந்ததாகும்.

4.3 மாறுபடும் இந்த உறவுகளிடை பாத்திரங்களிடை ஒரு சமநிலையை காணும் அதேவேளையில் தன் நடைமுறையின்வழி இப்பாத்திரங்களுக்கு புதிய அர்த்தங்களையும், வளர்ச்சி நிலைகளையும் தருகின்ற பணியும் நம்மைச் சேர்வன. சமூக மேம்பாட்டுக்கு தடையான உறவுச் சிக்கல்களை, பாத்திர கூறுகளை இனங்கண்டு அவற்றை உரியவாறு சீரமைக்கும் மாதிரிகளை காண்பதும், இன்று நம்மை எதிர்நோக்கும் அவசர பணியாகும்.

# மீட்பின் சின்னம் சிலுவை



இன்றைய உலகில் புரட்சிகரமான மாற்றங்களையும், கோரச்சீரழிவுகளையும் கண்கூடாகக் கண்டும், அனுபவித்தும் வருகின்றோம், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களும், சமுதாய வாழ்க்கையும் பண்பாட்டுமரபுகளும், கோட்பாடுகளும் அரசியலும், பொருளாதாரமும் சமயமதிப்பீடுகளும்கூட பாரியதாக்கங்களுக்கும், துரிதமாற்றங்களுக்கு முள்ளாயின. இக்காலகட்டத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் நமது வாழ்க்கை இச்சூழ்நிலைகளில் எப்படிச் செல்கின்றது என்பது பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இலௌகீக வாழ்க்கையில் மூழ்கியுள்ள நாம் சற்றேனும் நமது ஆன்மீகவாழ்வைப்பற்றி சிந்திப்பதுண்டா? நாம் இவ்வுலகில் செய்யும் செயற்பாடுகள் தான் எமக்கு மறுவுலக வாழ்க்கையைநிர்ணயிக்கும் மூலகாரணிகளாகும். மன மாற்றத்துக்குரிய இக்காலத்திலே எமது சொல், செயல், சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி இறைவனின் அன்பில் வாழவும், வளரவும் செயற்படுவது எமது கடமையாகும்.

இறை மகன் கிறிஸ்து மனிதனாக மண்ணில் பிறந்த்தன் மூலம் தன்னை முழுமையாக வெறுமையாக்கினார். இந்த வெறுமையாக்கலே அவரை மாபெரும் பாவி நிலையில் சிலுவை சுமக்கச் செய்தது. ''பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னித்தருளும்'' என்று தன்னை வதைத்தவர்களையும் மன்னித்து மறுவாழ்வினை வழங்கச் செய்தது. இதன் விளைவாக அவர் இறைவனோடு ஒன்றானார்.

இன்றைய நாட்களில் நாம் துன்ப வேளைகளில்''கடவுளே, கடவுளே'' என்று இறைவனை அழைக்கின்றோம். ஆனால் அயல்வீட்டுக் காரனுடன் கதைப்பது கிடையாது. சிறிய விடயங்களுக்கும் அயலவரைப் பகைக்கின்றோம். மன்னிக்க மறுக்கின்றோம். எமக்குபிடித்தவர்களை மட்டும் அன்பு செய்கின்றோம். பிறர் அன்பு எம்மிடம் இல்லாதபோது ''கடவுளே'' என்று அழைத்தால் என்ன பயன்? இதன் ஆரம்பகட்டமாக எம்மையே நாம் வெறுமையாக்க வேண்டும். எமது தன்னல உணர்வு, ஆணவம், அகந்தை, கோபம் போன்ற துர்க்குணங்களை அகற்றிவிட்டு பிறரன்புடன் கூடிய நல்ல கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இயேசு சுமந்த சிலுவைதான் புண்ணியத்தின் சங்கோபாங்கம்; பரிசுத்தத்தின் நிறைவு சிலுவையின்றி மனச்சமாதானத்தையும் பேரின்ப வாழ்வின் நம்பிக்கையையும் வேறெதிலும் எதிர்பார்க்கமுடியாது. அதனாலன்றோ கிறிஸ்துவும் ''உன் சிலுவையை சுமந்து கொண்டு என்னைப் பின்செல்'' என்றார். இறையன்பு, பிறரன்பு, இறைசித்தத்துக்கு பணிதல் போன்றன கடிமையானவை. இன்று எம் நாளாந்த வாழ்க்கையின் பிரதிகூலங்கள், இன்னல் இடைஞ்சல்கள், வாதை வருத்தங்கள், தாழ்வு, பிளவுகள், தனிமை, வறுமை இவைதான் நம் சிலுவைகள். மனுக்குலத்தின் பாவத்தை தன்சிலுவையிலே சுமந்தயேசுவின் சிலுவையிலும் பார்க்க பழுவான சிலுவையை சுமப்பவன் யார்? எமக்கு வழிகாட்டியாய் தன்சிலுவை சுமந்து சென்று மரணத்தைத் தழுவி உலகை ஜெயித்தவர் உத்தமன் யேசு. நாமும் தன்னைப்பின் சென்று அவர் அன்புக்காக நாமும் மரிக்கவேண்டும் என்று சித்தமாகிறார்.

● திருமதி அ. அருள் ஞானசிலி
நெடுந்தீவு

பெரிய சனிக்கிழமை திருவழிபாட்டு ஆசிரியர்களால் 'ஆண்டவரின் ஓய்வு நாள்' என அழைக்கப்படுகின்றது. படைப்புக்குப் பிறகு இறைவன் ஓய்வு இருந்தார். அவ்வாறே புதிய படைப்புக்குப் பிறகும் ஓய்வோ! திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டிலேயே இன்றுதான் அமைதியான நாள்! எவ்விதமான திருவழிபாட்டு சடங்கோ அல்லது நிகழ்ச்சியோ இல்லாத நாள்.

ஆனால் ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தொன்றாம் ஆண்டு பெப்ரவரி திங்கள் எட்டாம் நாள் திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் வெளியிடப்பட்ட பாஸ்கா திருவிழிப்புப் பற்றிய புதிய ஒழுங்குபடி சில மாற்றங்கள் அமைந்தன. மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சியிலும் பல மாற்றங்கள் அடைந்து இன்றைய வழிபாட்டு நிலையை அடைந்துள்ளது.


# பாஸ்கா திருவிழிப்பு

பாஸ்கா திருவிழிப்பின் போது பல அடையாளப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் பல ஆழ்ந்த கருத்துக்களை நமக்கு எடுத்தியம்புகின்றன.

## நெருப்பு:

கோயிலின் முகப்பில் புதிய நெருப்பு மந்திரிக்கப்படுகிறது. இருள் சூழ்ந்தநிலையில் புதிய நெருப்பின் ஒளிமட்டும் அவ்விடத்தை அழகு செய்கின்றது. தன்னுடைய பாடுகளினாலும் இறப்பினாலும் கிறிஸ்து இருளின்மேல் வெற்றி கொண்டார் என்பதை இச்சடங்கு எண்பிக்கின்றது. கதிரவனின் ஒளிக்கற்றைக் கண்டவுடன் இருள் ஓடி மறைவது போன்று, கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கண்டதும் பாவமும், சாத்தானும் ஓடி மறைகின்றன. இருள் அகற்றும் ஒளியாக இருக்கும் கிறிஸ்து நம் உள்ளங்களில் என்றும் ஒளிர முயற்சி செய்தல் வேண்டும்.


## பாஸ்கா திரி:



கிறிஸ்துவைச் சுட்டிக் காட்டும் ஓர் மிக உன்னதமான அடையாளமாக அமைகின்றது. கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றென்றும் இருப்பவராக காட்சி தருகின்றார். புதிய வாழ்வு தரும் கிறிஸ்து அவர்.

கிறிஸ்துவின் ஒளி நம்மை ஒளிர்விக்கின்றது. நமக்கு முன்னால் வழிகாட்டியாகச் செல்கின்றது. நாமும் அதனைப் பின்பற்றி, நம் உள்ளங்களைப் பயன்படுத்தி, நன்றி உணர்வுடன், பாஸ்கா நிகழ்ச்சியை நினைவு கூர்கின்றோம்.

## வார்த்தை வழிபாடு:



படைப்பு

மீட்பு

மீட்புக்கு அழைப்பு

என்ற அடிப்படையில் வாசகங்கள் அமைகின்றன. படைப்பு எல்லாம் இறைவனை நோக்குகின்றன. இறைவன் படைப்பின் மீது கருணைகொண்டு அதன் மீட்புக்காக தன் ஒரே மகனை அனுப்பி உலகம் உய்ய வழிவகுக்கின்றார்.

இறைவனின் வார்த்தைகள் நம்மைத் தேற்றுகின்றன; மன்னிக்கின்றன; அன்பு செய்கின்றன! அவ்வாறே நம் வார்த்தைகளும் அமைதல் நலம் அன்றோ!

## தண்ணீர் - ஞானஸ்நானம்:

ஞானஸ்நானத் தண்ணீர் மந்தரிக்கும் சடங்கு மிகவும் தொன்மை வாய்ந்தது. ஆதி காலத்தில் வயது வந்தவர்களுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுத்து வந்தனர். அந்நிகழ்ச்சியைக் குறிப்பதாக இச் சடங்கு அமைகின்றது. ஞானஸ்நானம் கொடுப்பது மட்டும் அல்லாமல் அதன் வாக்குறுதிகளைப் புதுப்பித்தல் இதன் சிறப்புமிக்க அம்சமாகும்.

தண்ணீர் நம்மை மூழ்கடிக்காமல் காப்பாற்ற உதவுகின்றது. நம்மைத் தூய்மைப்படுத்துகின்றது; அழகு படுத்துகின்றது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தண்ணீர் வாழ்வு தரும் சாதனமாகவே குறிக்கப்படுகின்றது. நம் வாழ்விலும் அது வாழ்வையும் வளத்தையும் தந்து சிறப்பு செய்கின்றது. இறைவன் சாதாரண அடையாளங்களின் மூலம் நம்மை தம் அன்பினால் மூழ்கடிக்கின்றார்.

( தொடர்ச்சி 6ஆம் பக்கம் )

# உயிர்ப்பு விழாவின் வாழ்க்கைச் செய்தி

ஆண்டுக்கு ஆண்டு வந்து போகின்றது பாஸ்கா விழா. இங்கு நாம் ஆண்டவன் இயேசுவின் பாடுகளையும், உயிர்ப்பையும் நினைவு கூருகின்றோம். ஆனால் இந்த விழா எம்முடைய வாழ்க்கையிலே ஏற்படுத்தும் தாக்கம் என்ன? இன்று இது வெறும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் மட்டும் நோக்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாகத்தான் எம்மவர் மத்தியிலே அமைந்து விடுகின்றது. நாம் பாஸ்கா விழாவை நினைவு கூருகின்றோம், கொண்டாடுகின்றோம். ஆனால் சிந்திக்கவும், தியானிக்கவும் மறந்து, மறுத்து விடுகின்றோம்.

## கிறிஸ்துவின் பாடுகள்:

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன சூழ்நிலைகளால் நடந்துவிட்ட, சரித்திரச் சம்பவமல்ல, அது தன்னிகரற்ற தலைவனின் அளவுகடந்த அன்பின் எடுத்துக்காட்டாக அன்புக்கு இலக்கணமாக அமைந்துவிட்ட ஒரு உன்னதத் தியாகப்பலி. கிறிஸ்துவின் இந்த தியாக நிகழ்ச்சி உலகத்திலே நடைபெறக்கூடிய தியாக வரலாறுகளுக் கெல்லாம் அப்பாற்பட்டது. இயேசுவின் இந்தப் பரிதாப, பரிசுத்த தியாகம் பொய்மை அகற்றி மெய்மை ஒளியை ஏற்றி இருளின் ஆதிக்கம் கலைத்து ஒளியின் பிரபையை நிறுத்தியது.

## வெற்றி எதற்கு:

இயேசுவின் மரணத்திற்கும் யூதப்பரிசேய, சதுசேயர்களின் கோபத்திற்கும் காரணமாக அமைந்தது அவருடைய நீதி மிகு போதனைகளும் அவர் நீதியின் மேல் கொண்டிருந்த தனியாத தாகமுமேயாகும். இயேசுவைக்கொன்று புதைகுழியில் போட்டுவிட்டால் அவருடைய போதனைகளும் சாதனைகளும் கூடமறைந்து போய்விடும் என்பது அந்த யூதர்களின் யூகம். ஆனால் அவர்களின் நம்பிக்கைகள் நாசமாகின. மெய்மையையும், நீதியையும் யூதர்களால் அடக்கமுடியவில்லை. இயேசு இறந்தார்; ஆனால் உயிர்த்தெழுந்தார். உடைத்தெறிந்தார் அநீதியின் ஆதிக்கத்தினை.

## உயிர்ப்பு விழாவின் செய்தி:

இந்த விழா கிறிஸ்துவின் நம்பிக்கை ஒளியிலே நம்மையெல்லாம் வாழச் சொல்லுகின்றது. நீதியைக் கடைப்பிடியுங்கள்; மனித உயிரைப் பேணுங்கள் என்று அறைகூவல் விடுக்கின்றது. சுயநலன்களைக் களைந்து விட்டு மற்றவரையும் வாழவிடுங்கள் என அழுத்திக் கூறுகின்றது. நீங்கள் குரல் கொடுக்கவேண்டியது நீதிக்காகவே! அடிபணிய வேண்டியது கொல் கருவிகளுக்கல்ல, அன்புக்கே! உழைக்க வேண்டியது உண்மைக்காகவே! பாவத்தைப் பகையுங்கள், பரிசுத்தம் பேணுங்கள் என்னும் எழுச்சி மிகு, பொருள் பொதிந்த, உயரிய சிந்தனைச் சிதறல்களை, செய்திகளைத் தருகின்றது உயிர்ப்புவிழா.


● கி. அந்தோனிதாஸ் டலிமா
யாழ். குருத்துவக் கல்லூரி.

# அம்மா எனும் இறுதிமொழி

● R. அதிதி

அம்மா என்பது மழலை மொழி
அதுவே இன்பம் அருளுமொழி;
என்று மின்னல் அகற்றுமொழி
எவர்க்கு மன்பு கூருமொழி;
எல்லா உலகும் போற்றுமொழி
எங்கும் உறவை வளர்க்குமொழி;
எல்லையில்லா ஆற்றல் மொழி
அது தான் உலகை ஆளும் மொழி,
அதுவே இயேசுவின் இறுதி மொழி;
" அம்மா! இதோ உன் மகன்,
இதோ உன் தாய்."

# சிலுவை மரணம்



''நண்பகல் தொடங்கி மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. மூன்று மணிக்கு இயேசு, ''ஏலி, ஏலி, லெமா, சபத்தானி...'' என்று உரக்கக் கூவினார்.''

சிலுவைமரணமானது முதன் முதலில் பேர்சியா நாட்டில் தான் அறிமுகமானது. பூமியானது ஓர்முஸ்ட் (Ormuzd) எனப்பட்ட பேர்சிய தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என எண்ணிய பேர்சியர், மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளியின் கால் முதலாய் பூமியில் பட்டு, பூமி தீட்டுப்படக் கூடாது என்றெண்ணி அவனை நிலத்தில் இருந்து உயர்த்தி கொல்லும் பொருட்டு இத்தண்டனை உருவாக்கப்பட்டது. அங்கிருந்து காலப்போக்கில் வடஆபிரிக்காவில் கார்த்தேஜுக்கு பரவி (Carthage) கார்த்தேஜில் இருந்து இவ் வழக்கம் ரோமுக்கும் பரவியது. இத்தண்டனையின் கொடூரத்தை நன்கு விரும்பிய ரோமர், இதனை தங்கள் அடிமைகளுக்கும், மிகவும் மோசமான குற்றவாளிகளுச்கும் பயன்படுத்தினர். சிலுவை மரணம் பற்றி குறிப்பிடும் யூத எழுத்தாளர் லவுஸ்னர் (Klausnor) ''பயங்கரமும்; கொடூரமும் நிறைந்தது. மனித கண்டுபிடிப்புகளுள் மிகவும் மோசமானது'' என்கிறார். 'மிகவும் பயங்கரமானது' என்கிறார் சிசரோ. 'அடிமைகளுக்கு மட்டுமே உகந்தது' என்கிறார் தாசித்துஸ் என்னும் சரித்திராசிரியர்.


இத்தகைய மரணத்தைத் தான் இயேசுவும் அனுபவித்துக்கொண்டிருந்தார். மரண வேளை நெருங்க நெருங்க, சம்பவங்கள் துரித கெதியில் நடக்கத் தொடங்கின. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நேரம் காலை 9 மணியிலிருந்து (மாற். 15:25) அவரது மரணநேரம் பி. ப. 3 மணி என்று மாற்கு மீண்டும் குறிப்பிடுகிறார். ஆகவே இயேசு சிலுவையில் நிச்சயமாக 6 மணித்தியாலங்கள் துன்புற்றிருக்கவேண்டும் என அனுமானிக்கலாம். அவரது மரணம் மற்றய குற்றவாளிகளைப் போல நாட்கணக்கில் நீடிக்காது, குறுகியதாக இருந்தது. மரணவேளை அண்மித்தபோது இயேசு ''என் கடவுளே ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்?'' என குரலெழுப்பினார். நெஞ்சை தொடும் அக்குரலை கேட்டு மகாசிரவணத்துடன் தலை கவிழும் நாம் அதன் அர்த்தத்தை சிந்திப்பது அவசியமாகும். கிறிஸ்து உண்மையில் 22வது சங்கீதத்தையே மீட்டார் என்பர் சிலர். இது போதிய காரணமன்று. மரணத் தருவாயில் உள்ள எவரும் சங்கீதம் பாடியிருக்க முடியாது என்பர் வேறு சிலர். உலக பாவங்களின் கனத்தால் நொறுங்குண்ட ஒரு மனிதனின் துயரக்குரலே அது. இக் கதறலைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு அது பெரும் புதிராய் இருந்திருக்க வேண்டும். யூதரோ ''அவன் எலியாசைக் கூப்பிடுகிறான்'' என்றனர். ரோமரோ ''சூரிய தெய்வமான ஹேலியோசை (Helios) அழைக்கின்றான்'' என்றனர். இக் கதறலுடன் அவர் ஆவி துறந்திருந்தால் நிலைமை மோசமாக இருந்திருக்கும். ஆனால் வரலாறு நீளுகின்றது. ''அவர் மீண்டும் உரக்கக் கத்தி உயிர் நீத்தார்'' என்கிறது. அவ்வுரத்தகுரல் மனித இதயங்களை ஊடுருவியது. இதை மூன்று நற்செய்திகளும் ஒருமித்து கூறுகின்றன.

அருளப்பர் நற்செய்தியோ மேலும் கூறுகையில் ''எல்லாம் முடிந்தது என்று கூறி உயிர் நீத்தார்'' என்கிறது. ஆங்கிலத்தில் மூன்று சொற்கள். (It is finished) இது கிரேக், அரமெயிக்கில் ஒரே சொல்லில் TETELESTAI ஆகும். தனக்களிக்கப்பட்ட பணியை செவ்வனே முடித்த வெற்றியாளனின் முழக்கமே Tetelestai என்பதாகும். வேதனை மிகுந்த இருண்ட பயணத்தின் முடிவில் மகிமையின் கிரீடத்தை கைப்பற்றிய வெற்றி வீரனின் குரலே இது. தம்பணியை முற்று முழுதாக நிறைவு செய்து எம் பாவங்களுக்கு நிவாரணப் பலியாக, வெற்றியாளனான இயேசு அவமானம் நிறைந்த அச்சிலுவையில் பலியானார். இதில் இருந்து உண்மையொன்று புலனாகிறது. துன்பங்கள், துயரங்கள், அவமானங்கள். இவற்றின் தாக்கங்களால், கடவுளே இல்லை என்ற நிலையிலும், எமது விசுவாசத்தில் உறுதியாக ஊன்றி நிற்போமானால், நாம் நிச்சயம் வெல்லுவோம். தான் கைவிடப்பட்டதாக உணரும்போது கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தைகைவிடாதவனும், முற்றிலும் நொறுக்கப்பட்டும் அவரைப் பற்றியவனுமே வெற்றியாளனாவான்.

இதையேதான் கிறிஸ்துவும் தன் மரணத்தின் வாயிலாக எண்பித்தார்.

● எம். என். நவரட்ணராஜா
வளன்புரம்

# யார் இந்த பிலாத்து?



மத். 27:1, 2, 11–26

''காலையானதும் தலைமைக்குருக்கள், மக்களின் மூப்பர் எல்லோரும் இயேசுவைக் கொல்ல அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர். அவரை நடத்திச் சென்று ஆளுநன் பிலாத்துவிடம் கையளித்தனர்.''

யூதேயாவின் ஆளுநனாக இருந்த பிலாத்து ரோமை செனட்டுக்கல்ல, ரோமைய மன்னனுக்கே நேரடியாக பதில் சொல்ல வேண்டியவனாவான். 27 வயதை அடைந்திருந்த இவன் பதவிக்கேற்ற வயதை அடையாதபோதிலும் போதியளவு அனுபவமும் ஆற்றலும் பெற்றிருந்தான். இராணுவத் தளபதியாக இருந்த இவன் ரோமைய பேரரசின் சிறந்த நிர்வாகிகளில் ஒருவனுமாவான். கி. பி. 26ஆம் ஆண்டில் யூதேயாவின் ஆளுநனாக பதவியேற்ற பிலாத்து அங்கிருந்து திருப்பி அழைக்கப்படும் வரை 10 வருடங்கள் பதவி வகித்தான்.

பிலாத்துவின் ஆட்சியை பற்றி அலக்சாந்திரியாவைச் சேர்ந்த பிலோ என்னும் அறிஞர் குறிப்பிடும் போது ''யூதர்கள் பிலாத்துவின் கொடுஞ் செயல்களையும், நீதி முறையற்ற கொலைகளையும், ஆட்சியின் ஊழல் நிறைந்த நிர்வாகத்தையும், ரோமைக்கு முறையிட்டு அவனது பதவிக்கு ஆபத்தைஉண்டு பண்ணியிருக்க முடியும் என்கிறார். பிலாத்துவின் இறுதிக்கால ஆட்சியின் போது, போலி இறைவாக்கினன் ஒருவன், மோயீசன் பாவித்தபுனித பாத்திரங்களை காட்டுவதாக கூறி மக்களை சமாரியாவில் உள்ள ஜெரிசிம் மலைக்கு அழைத்தான். துரதிருஷ்டவசமாக ஓரளவு மக்கள் கூட்டம் ஆயுதபாணிகளாக ரிராபெத்த என்னும் சமாரிய கிராமத்தில் கூடியது. இதையறிந்த பிலாத்து தனது சைனியத்தை ஏவி அவ் அப்பாவி மக்களை கொன்றுகுவித்தான். இதனையிட்டு சமாரியர் சிரியாவில் இருந்த பிலாத்துவின் உயர் அதிகாரிக்கு முறையிட்டனர், இதன்பேரில் விற்றேயுஸ் எனப்பட்ட அவ் அதிகாரி விசாரணையின் பொருட்டு, பிலாத்துவை உடன் உரோமைதிரும்புமாறு பணித்தான்.

பிலாத்து உரோமையை நோக்கி பிரயாணம் செய்து கொண்டிருக்கும் சமயம் உரோமையில் திபேரியுஸ் மன்னன் இறந்து விட்டான். ஆனால் வரலாற்றை உற்று நோக்கும் போது இப்படியொரு விசாரணை எப்போதுமே நடைபெறவில்லை என்றுதெரிகிறது.

பாரம் பரியத்தின்படி பிலாத்து இறுதியில் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாகவும் அவன் உடல் தைபர் நதியில் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது; தைபர் நதியில் பிலாத்துவின் உடலால் தீய ஆவிகள் அட்டகாசம் செய்வதாக கூறி ரோமையர் அதனை எடுத்து ரோன் (Rhone) நதியில் வீசினர். அங்கும் முன்னைய நிலமை

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# என்றும் நீர் என்னுடன்

வாழ்க்கையின் சக்கரம் சுழன்ற போதும்
வசந்தங்கள் தொடர்ந்தும் மறைந்த போதும்
உலகமே மறந்தென்னை வெறுத்த போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

விலையுயர்வினால் உணவையே மறந்த போதும்
வீட்டில் அனைவரும் உணவின்றி இருந்த போதும்
உண்ணாமல் ஊன்உடல் இருந்த போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

நோவுடன் நான் இருந்த போதும்
நோயினால் உடல் நலிந்த போதும்
உலகமே கசந்து போன போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

ஆபத்து என்னை சூழ்ந்த போதும்
'ஆ! உயிர் போனதோ' என்ற போதும்
உயிரை நினைத்து நான் பயந்த போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

வாழ்க்கையில் கவலை வந்த போதும்
வாழ்வையே பசிபிணி தின்ற போதும்
உறுதியுடன் வாழ்வை நான் நடத்துவதால்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

● செல்வன். ரூ. மொன்ரினி
யாழ். பல்கலைக்கழகம்
2 ஆம் ஆண்டு முகாமையியல்

# மாவீரன் இயேசுவும் மரணிக்கும் என் மண்ணும்

★ ''தமிழ் நேசன்''

ஓ மரமே...!
நீ வாழ்வுக்கும் சாவுக்கும்
வழிகோலினாய்.

விலக்கப்பட்ட மரத்தால்
அன்று பாவம் பரவியது.
ஒதுக்கப்பட்ட மரத்தால்
இன்று வாழ்வு வந்தது.

இயேசுவே !
விடுதலையின் விலை
உனது அரிய உயிர்தான்
என உணர்ந்தவன் நீ.
அதனால்தான்
மரணத்தைத் தழுவி
மாவீரன் ஆனாய் !

இந்த மண்ணின்
பசி வேள்வியில்
நாங்கள் இன்று
பலிக்கடாக்கள் ஆகின்றோம்.

ஆயிரமாயிரமாய்
அகதிக் குடிசைகள்
இங்கு அதிகரிக்கிறது.
இழப்புக்கள்தான்
எமது இன்றைய
நிலையான இருப்புக்கள்.

உனது பாடுகளில்
இன்று நாங்களும்
பங்காளிகள்தான்.

தாயகம் நோக்கிய
இஸ்ராயலரின்
பாஸ்காப் பயணமும்
பாலைவன அனுபவமும்
இன்று எமக்குப்
புதியவை அல்ல !
ஆனால்
செங்கடலைக் கடந்த
அவர்களின் மகிழ்ச்சியும்
கிளாலிக் கடல் பற்றிய
எமது மன உணர்வும்தான்
மாறுபாடானவை !

ஓ மரணித்த மாவீரனே !
உனது
கசப்பான அந்தக்
கல்வாரி அனுபவம்
இன்று எமது எல்லோரதும்
வாழ்வாகி விட்டது.

உனது கஸ்ரங்கள் எல்லாம்
வெறும் கனவுகள் அல்ல.
அவை வரலாற்றுக் காவியம்.
ஏனென்றால்
கல்லறை திறந்தது
காரிருள் மறைந்தது
நீ உயிர் பெற்றாய்.

போர்மேகம் சூழ்ந்த
இப் புனித வேள்வியில்
நாமும் ஒரு நாள்
வெற்றி பெறுவோம்.
அதுதான் எமது உயிர்ப்பு !

# 'பிச்சைக்கார வள்ளல்'

நேரம் எட்டுமணி.

இன்னும் முப்பது நிமிடத்திற்குள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவிட வேண்டும்.

எண்ணங்கள் மனதில் எழுந்து கொள்ள... அவன் தனது துவிச்சக்கரவண்டியை வேகமாக மிதிக்கத் தொடங்கினான்.

ஒரு கை துவிச்சக்கரவண்டியின் 'காண்டிலைப்'ப் பிடித்தபடி... மறுகையால் இரண்டு இறாத்தல் பாணை நெஞ்சோடு அணைத்தபடி... துவிச்சக்கர வண்டியின் வேகம் வர... வர அதிகரித்துக்கொண்டிருந்தது.

அவன் ஒவ்வொரு நாளும், காலை வேளையில் பாண் வாங்குவதற்காக இதே வீதியில் 'றேஸ்' ஓடுவது வழக்கமாகி விட்டது.

தெருவிலே ஒரு திருப்பம்... அவன் துவிச்சக்கரவண்டியின் 'கான்டிலை' லாவகமாகத் திருப்பி எடுத்தும்... எதிரே வந்துகொண்டிருந்த ஒரு வயோதிபப் பிச்சைக்காரனோடு மோதிக்கொள்ள...

நெஞ்சோடு அணைத்துக்கொண்டிருந்த இரண்டு இறாத்தல் பாண், அவன்பிடியிலிருந்து தெறித்து தெருவிலே உள்ள கழிவு வாய்க்காலுக்குள் போய் விழுகிறது.

எல்லாம் ஒருகணம்...

தெருவிலே நடந்துவிட்ட இச்சம்பவத்தை வேடிக்கை பார்ப்பதற்காக சொந்த அலுவல்களையும் மறந்து சூழுகின்ற மனித கூட்டம்...

அவனுக்கோ நாலுபேருக்கு முன்னால் அவமானப்பட்டுவிட்டதொரு நிலைமை. மனதிற்குள் அடக்கமுடியாத ஆத்திரம். காலை ஆகாரத்திற்கென பிள்ளைகளுக்கென்று வாங்கி வந்த பாண்...?

அதைவிட நேரம் நகர்ந்துகொண்டிருப்பது அவனுக்கு கொதியைக் கிளப்பியது. "அடபிச்சைக்காரப் பயலே, கண் என்ன பிடரிக்குள்ளையா கிடக்கு. அநியாயமாக இரண்டு இறாத்தல் பாண்... இப்ப என்ரை பிள்ளைகளுக்கு என்னத்தை வாங்கிக்கொண்டு போய்க் குடுக்கிறது...?"

அவன் பொரிந்து தள்ளினான்.

பிச்சைக்கார கிழவனுக்கு கண்கள் கலங்கிவிட்டன. கண்களில் சுரந்து வழிந்த கண்ணீரை சுட்டுவிரலால், சுண்டிவிட்டு அருகில் உள்ள பலசரக்குக் கடைக்கு சென்றான், பிச்சை எடுக்கும் பாத்திரத்தினுள் கிடந்த சில்லறைகளை தட்டித் தடவி பொறுக்கி எடுத்தவன், இரண்டு இறாத்தல் பாணை வாங்கிக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தபோது... அவன் மட்டுமல்ல அங்கு கூடிநின்று வேடிக்கை பார்த்த அந்த மனித கூட்டமும் திகைத்துப்போய் நின்றது.

"தம்பி.. பாம்பின்ரை காலை பாம்புதான் அறியும், வயிற்றுப்பசி எப்படிப் பட்டது என்பது எனக்குத் தெரியும், ஏனென்றால் நானொரு பிச்சைக்காரன்..."

குரல் கரகரத்துக் கொள்ள வாய்க்குள் சுரந்த எச்சியை மிடறு முறித்து விழுங்கினான்.

"இந்தா நேரத்தோடை போய் இந்தப் பாணை பிள்ளையளுக்கு குடு அதுகள் பள்ளிக்கூடம் போறதுக்கு நேரம் போகப் போகுது..."

பிச்சைக்காரன் கூறிவிட்டு தன்வழியில் நடக்கத் தொடங்கினான்.

இப்போது அவன் மட்டுமல்ல.. கூடிநிற்கும் அந்த மனித கூட்டமும் என்ன பேசுவதென்றே தெரியாத நிலையில் செயலிழந்து வாயடைத்துப் போய் நிற்க.. நேரம் மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தது.

ஆர். அலெக்ஸ் பரந்தாமன்.

# சோதனையின் வேதனை

( சிறுகதை ) ● கு. யூட் றிறோன்—சில்லையூர் —

இதமான காலைப்பொழுது. இனிய காற்று வீசிக்கொண்டிருந்தது. குயில்களின் கூவுதலும், பறவைகளின் கீச்சொலியும், காகங்களின் கரைதலும் சேர்ந்து ஒரு இசை நிகழ்ச்சியையே நடத்திக் கொண்டிருந்தன. தூரத்திலே யன்னல் கம்பிகளூடே வெண்மதியம் மரங்களிடையே விழுந்து கொண்டிந்தான். அருகிலே ஒரு சேவல் சிறகடித்துக் கூவிய ஓசை செவியில் வந்து வீழ்ந்தது. சோம்பல் முறித்துக் கொண்டேன். வெளியெங்கும் போர்த்திருந்த மெல்லிருளின் மென்மையை இரசித்தேன். ஆனால் அடிமனதில் ஒரு முனகல்.

"என்னடா கவலையாய் இருக்கிறது" என எண்ணிப் பார்த்தேன். "அடடா! இப்படி நடந்து விட்டதே. சீச்சீ, இதென்ன பெரிய தொல்லையாக இருக்கிறது. அந்த மனுசனிடம் இன்றைக்கு என்னத்தைச் சொல்லி கடத்துறது" என நினைத்துக் கொண்டேன். எல்லா மனிதருக்கும் சோதனைகள் தான் வாழ்வில் நிறைந்துள்ளவை. அவற்றிலிருந்து விடுபடுவது மிகவும் கடினம். அவை எம்மை வேதனையில் ஆழ்த்தி விடுகின்றன. எல்லாவற்றையும் விட்டு எங்காவது ஏகாந்தமாய் ஓடிப் போனால்..." எனது சிந்தனை தொடர்ந்தது. ஆனால், இவ்வளவிற்கும் காரணமான ஒரு சிறு நிகழ்வுக்காக வேதாந்தியாக மாற முற்பட்டு விட்டேனே என்ற நினைப்பு வந்ததும் சிரிப்பு வந்தது. ஆனாற் சிரிக்கமுடியவில்லை.

அன்றும் ஒரு சாதாரண நாள்தான். பாடசாலையில் வழமை போல அமர்ந்து படித்துக்கொண்டிருந்தேன். மூன்றாம் பாடம் முடிந்து மணி அடித்ததும் தமிழ் ஆசிரியர் வந்து உட்கார்ந்துகொண்டார். அவர் கையில் ஏதோவொரு பழைய நூல் இருந்தது. அதில் இருந்த நீதிநூற் பாக்களுக்கு யாரோ ஒரு அறியாப் புலவர் எழுதிய புகவுரை, பொருளுரை, நயவுரையைப் பண்டிதர் எமக்கு வாசித்துக்காட்டினார். அப்புத்தகத்திற்கு மட்டை என்ற ஒன்று இருந்ததற்குச் சான்றுகளேதும் இல்லை. மூலைகளும் விளிம்புகளும் நொய்ந்து பிய்ந்து போய்த் தொங்கிக் கொண்டிருந்தன.

ஆனாலும், அதனுள் அடங்கியிருந்த பொருள் பெரிது. இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்ட அதில் நயவுரை எழுதியிருந்தது. அந்த நயத்தின் நயத்தை நான் நயந்து கொண்டேன். என்றாலும் அது இப்படியொரு கேடாக வந்துவிழுமென நான் எதிர் பார்க்கவே இல்லை.

விதி எதைத் தீர்மானிக்கிறதோ அதைச் செய்தே தீரும். ஒருவன் சாகவேண்டும் என்றிருந்தால், பூச்சி பூரான் கடித்துக் கூடச் செத்து விடுவான். இவ்வாறான விதிதான் எனக்கும் போலும். எனக்குப் புத்தகமென்றாற் பைத்தியம் தான். அதற்குப் போயும் போயும் அந்தப் பழம் புத்தகத்தையா கேட்கவேண்டும்? விதி வரைந்த கோலமது. யார் தான் என்ன செய்துவிட முடியும்? தமிழ் ஆசானும் மறுப்புத் தெரிவிக்காமல், "இரண்டு நாளுக்கு 'வைச்சுப் படிச்சுப் போட்டுத்தா தம்பி. பத்திரம். இந்தப் புத்தகம் இப்போது கிடையாது" என்று சொல்லித் தந்துவிட்டார். அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்த இராத்திரியிற் குடைபிடிப்பானாம். எனக்கு ஒருவர் புத்தகம் தந்தால் அதைத் தலைமேலா கொண்டு திரிவது? ம்... ம்... பெருமூச்சு விட்டு என்ன பயன்?

இடைவேளை மணி அடித்தது. மதிய உணவு நேரம் ஒரு மணித்தியாலம், பதினைந்து நிமிடத்திற் சாப்பாட்டைக் காலி செய்துவிட்டேன். மீதி நேரத்தைப் போக்குவதற்காக அந்தக் கிழிந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டு மைதானத்தின் ஒரு மூலையிலிருந்த முகிழ மர நிழலிற் போய் உட்கார்ந்து கொண்டேன். புத்தகத்தை விரித்து மெதுவாக வாசிக்கலானேன்.

சிவபூசையில் கரடி நுழைவது எவ்வாறென்பதை அன்று தான் அறிந்துகொண்டேன். யாரோ ஒருவன் திடீரெனப் புத்தகத்தை இழுத்துப் பறித்தான். "அடேய்" என்றவாறு நிமிர்ந்தபோது நண்பனொருவன் என் புத்தகத்தை இரு கைகளாலும் இறுகப் பிடித்திருந்தான். புத்தகம் கிழிந்து விடவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டேன். அவன் நூலை மிக உன்னிப்பாகப் படிப்பது போலப் பாவனை செய்தான். அவனிடமிருந்து அப்போதைக்குப் புத்தகத்தைப் பெறுவது, கல்லிலே நாருரிப்பது போன்றது என எனக்குத் தெரியும். வலிய வந்து தானாகத் தருவான் என்றெண்ணியவாறு, தூரத்தில் வந்த எனது சக கூட்டாளியோடு இணைந்து கொண்டேன். என் அக்கறையின்மை தான் எல்லாவற்றிற்கும் காரணம்.

மதிய இடைவேளை முடிந்ததெனச் சாற்றும் மணி அடித்து ஓய்ந்தது. இன்னும் ஐந்து நிமிடத்துள் வகுப்பறை வாசலில் வரிசையில் நிற்க வேண்டும். அப்பொழுதுதான் புத்தகம் பறித்த என் நண்பன் வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்தான். அவனது கையிலே நூலைக் காணவில்லை. எனக்குப் பகீரென்றது.

"எங்கேடா புத்தகம்" என்றேன். அவன் திகைத்து நின்றான். "மரத்தடியில தான் கிடக்க வேணும்" என்றவாறு திரும்பி ஓடினான். நானும் அவனது கால் தொடர்ந்தேன் முகிழ மரத்தடியில் வந்து நின்றபோது புத்தகம் மாயமாக மறைந்து விட்டிருந்தது. 'யார் தூக்கினாரோ? நாய் பூனை கவ்விக் கொண்டு போயிருக்குமோ?' என்றெண்ணித் திகைத்து நின்றேன். கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே என்பர். அக்கணமே பாடசாலையை ஒரு அலசு அலசியிருக்கலாம். ஆனால், ஏனோ அது அசாத்தியமாகப் பட்டது. அப்படித் தேடியிருந்தால் ஒரு வேளை கிடைத்திருக்குமோ என்னவோ?

திரும்பி வகுப்பறைக்கு வந்தோம். பின்னர் தான் அவன் நடந்தவற்றைச் சொன்னான். அவன் வாசித்துக் கொண்டிருந்தபோது யாரோ பின்னாலிருந்து அடித்திருக்கிறான. குறும்பனல்லவா இவன்! உடனே புத்தகத்தைக் கீழே போட்டு விட்டு மற்றவனைக் கலைத்துப் பிடித்து அடியும் போட்டு விட்டு வெற்றிக் களிப்போடு மரத்தடிக்கு வந்தால்... புத்தகமில்லை; என்ன செய்வான்?

அன்றிலிருந்துதான் எனக்குச் சோதனை ஆரம்பமானது. அடுத்த நாள் வகுப்பறையிற் தமிழாசிரியர்,

"என்னதம்பி புத்தகம் வாசித்தாயா?"

"ஓம் சேர்." — பொய். அப்பொழுது தான் எனக்கு, அடுத்த நாள் அப்புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்பது உறைத்தது. வீடு போனவுடன், சிலவேளை வீட்டிலேயே அப்படியான ஒரு நூல் இருக்கலாம் என்ற நப்பாசையிலே தேடலானேன். அம்மா,

"என்ன தம்பி தேடுறாய்?"

"ஒரு கொப்பியைக் காண'ல்லை" — மீண்டும் பொய். இரண்டாம் நாள் ஆசான் கேட்டார் புத்தகத்தைக் கொணர்ந்தாயா என்று. மறந்து விட்டேனென இன்னொரு பொய் கூற வேண்டியதாயிற்று.

நான் களவெடுத்தோ, அல்லது பெரிய குற்றஞ் செய்தோ பொய்சொல்லித் தப்பிக் கொள்பவனல்லன். 'உண்மையாக' நான் பொய் சொல்வதை வெறுப்பவன். ஆயினும் பொய்யுரைக்க வேண்டியதாயிற்று. புத்தகத்தைத் தேடியெடுத்துத் திருப்பியளித்து விடலாம் என்ற நம்பிக்கையும், என் சுயகௌரவம் போய்விடுமே என்ற பயமுமே எனது பொய்களுக்குக் காரணம்.

ஒருபொய் சொன்னால் ஒன்பது பொய் சொல்லவேண்டும் என்ற முதுமொழியை நான் இதுகாறும் ஏட்டுவடிவிலேயே அறிந்திருந்தேன். ஆனால் இப்பொழுது வாழ்க்கை அனுபவத்திலும் அறிந்து கொண்டேன். கடந்த ஒரு வாரமாக ஆசிரியருக்கு ஒரே பொய்தான். கடைசியாக, "ஒருவனிடம் கொடுத்தேன். அவன் இன்னமுந் தரவில்லை" என்ற சாட்டைக் கூறலானேன். ஆயினும் "மனுசன்" விடவில்லை. அவனிடம் வாங்கித் தருமாறு தினமும் சொல்லுவார் என்றாலும் முகங்கோண மாட்டார்.

நானும் உள்ள நாட்டுப் பழைய புத்தகக் கடைகளில் உள்ள நூல்களைத் தூசி தட்டி மீண்டும் அடுக்கி விட்டேன். ஆனாலும் அதுபோன்ற புத்தகம் கிடைக்கவேயில்லை. 'விலை கொடுத்து வாங்கக் கூடிய புத்தகமாயிருந்தால் வாங்கிக் கொடுத்து விடலாம். ஆனாற் கிடைக்காத பொருளை எப்படிப் பெற்றுக் கொடுப்பது? பழி வரவேண்டுமானால் இங்ஙனமா வந்து சேர வேண்டும்? எல்லாம் திட்டம் போட்டமாதிரி வந்தமைந்து இத்தவறு நேர்ந்து விட்டதே!' இவ்வாறு என்னையே நொந்து கொண்டேன்.

பழைய நினைவுகளிலிருந்து மீண்ட நான் அந்த அழகிய காலைப் பொழுதினிலே ஆழ்ந்து சிந்தித்தேன். அன்றும் பொய் சொல்ல வேண்டுமென்ற உணர்வு என்னை முள்ளாய்க் குத்தியது. அறிந்தும் செய்வது கொடும் பாவம் அல்லவா, 'எனக்கு ஏன் இத்தனை சோதனைகள் வருகின்றன?" காலையிளந் தென்றலும் வெளிப்படையான இயற்கை வனப்பும் என் உள்ளுணர்வுகளைத் தூண்டிவிட்டன. இயற்கையும் அதிலுள்ள யாவும் பொய் பேசுவதில்லை. ஆதலால் மகிழ்வுடன் வாழ்கின்றன. ஆனால், இயற்கை வழிப்பிறந்த மனிதனோ, தன்னைத் தானே செயற்கையாக்கிப் பொய்மையில் உழன்று துன்புறுகிறான். உண்மை எவ்வளவு அழகானது. இறைவனே உண்மையின் நிறைவன்றோ? இது போன்ற எண்ண அலைகள் என்னுள்ளத்தில் ஆர்ப்பரித்துப் பொங்கியெழுந்து மோதின. என்னால் என்னையே அடக்க முடியவில்லை. நான் அழுதே விட்டேன்.

புத்தகம் பெரிய விடயமல்ல. ஆனால், நான் சொன்ன பொய்... அதன் மனவேதனை அவை அகல பாதாளபோன்றன. தடுமாறுவோரை விழுங்கி விடக்கூடியன. அவைதான் எனது கண்ணீருக்குக்காரணம். 'வாத்தியாரிடம்' உண்மையைச் சொல்லி விடலாமென நினைத்தேன். ஆனால் என் கௌரவம், சுயமானம் எல்லாமே கேள்விக்குறியாகி விடுமே என்றெண்ணித் தயங்கினேன். இருந்த பொழுதிலும் என் மனச்சாட்சி பிரயோகித்த அழுத்தம் என்னைப் பீடச் செய்தது. உண்மையைக் கக்க வைத்தது. "பொய்யுரைத்து வேதனையுள் மூழ்குவதைவிட உண்மைபேசி மானங்கெடுவது

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# "உயிர்த்து நின்ற உத்தமர்"

''அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்து விட்டார் என்று அவர் சீடருக்குச் சொல்லுங்கள்.'' இந்நற்செய்தி இறையேசுவின் உண்மைச்சீடர்களாய் வாழ்பவர்களுக்கு மனமகிழ்ச்சி தருகிறது. உயிர்த்த யேசு நம்மிடையே உலவுகிறார் என்பதை உணர்கிறோமா? மனத்துயரம் பெருங்கடலாகப் பொங்கும்போது அவரைக் காண இயலுவதில்லை. அழுது கொண்டிருந்த மதலேனாள் யேசுவைக் காணவில்லை. ''மரியே'' என்றழைத்த பின் பாதம்பணிகிறாள். நம்மைப் பெயர் சொல்லி அழைத்துத் தேறுதல் கூற யேசு நம் அருகிலேயே நிற்கிறார். வாழ்வின் நெருக்கடியில் மனக் குழப்பம் நம்மைச் சூழ்ந்து கொள்ளும் போது நம் அகக் கண் பார்வையிழந்து விடுகிறது. எம்மாவுஸ் சென்ற சீடர் நடுவே யேசு வழி நடந்தும் அவர்கள் உணரவில்லை. ''எங்களோடு தங்கும்'' என அவரோடு இணைந்து விட்ட நேரத்தில் மனக்குழப்பம் நீங்கினர். நாமும் யேசுவின் துணையிருப்பைத் தேடி ஓடுவோம்.

அச்சம் எம்மை ஆட்கொள்ளும் நேரம் மனச் சோர்வு ஏற்பட்டுச் செய்வதின்னதென்று புரியாத நேரம் யேசு நம்மிடம் வருகிறார். பூட்டியிருந்த அறையினுள் சீடர்கள் இருக்கும் போது யேசு அங்கு தோன்றி ''உங்களுக்கு சமாதானம்'' எனத் தேற்றுகிறார். தேடிவரும் தெய்வத்திடம் நாமும் சரண் அடைவோம். இருமனங் கொண்டோராய்த் தயங்கும் வேளை யேசு திடமளிக்கிறார். உயிர்ப்பையுணரப் பின்வாங்கிய தோமையாரை யேசு தேடிவந்து ''விசுவாசம் கொள்'' எனத் திருவாய் மொழிகிறார். துயரத்தைத் தீர்க்கும் மருந்து. மனக் குழப்பம் நீக்கும் கதிரொளி.



துணைநிற்கும் தூயவர். வழி நடத்தும் வான் விருந்து. உயிர்த்து நின்ற உத்தமர் யேசுவின் பாதையில் காலடி வைத்து நடப்போமாயின் கவலைகள் காலைப்பனியென மறைந்து விடும்.

● செ. ஜோண் ஒவ் ஆக்
நாவாந்துறை

# உன்திசை எத்திசை?

மனிதன் பிறக்கின்றான்!
மீண்டும் ஒரு நாள்
இறக்கின்றான்!

இவ் இரண்டிற்குமிடையில்
புரள்கின்றான்!
நிலத்தில் அல்ல,
பாவத்தில்!

பிறக்கும் போது
அழுதவன்
இறக்கும் போதும்
அழுகின்றான்!
ஏன்?

இறைவன் அழைக்கின்றார்
இனியும் அவனால்
இழக்க முடிந்தது
அவன் கண்ணீரைத்தான்!

கண்ணீரை விட்டுச்
செல்பவனுக்கு
பாவத்தை விட்டுச்
செல்ல முடியவில்லை!
ஏனெனில்,
அவனது உள்ளம்
பாவத்தின் இல்லம்!
'பாவம் இறைவன்'
படைத்தார் மானிடனை
அழைத்தார்
தன்னுடன்
ஆனால் அவன்
திசைமாறி போகின்றான்!
மானிடா!
சற்று நில்!
கொஞ்சம் திருப்பிப் பார்!
உன் திசை
எத்திசை?

● ஷிரோமி

# பாஸ்கா திருவிழிப்பு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பாஸ்கா கீதம்:

இதன் முழு இறையியல் கருத்து "Exsultet" எனும் பாடலில் எண்பிக்கப்படுவதை நாம் காண்கின்றோம். இப்பாடல் இம் மறைபொருளை மூன்று நிலைகளில் நமக்கு உணர்த்துகின்றது.

- பழைய ஏற்பாட்டில் முன் அடையாளம்.
- வரலாற்றுநிகழ்ச்சியின் பின்னணி.
- இன்றும் என்றும் அமையும் திருவருட்சாதன நிலை.

பாஸ்கா விழா நம் பெரும் விழா. கிறிஸ்து உயிர்ப்பு நம் நம்பிக்கை.

# நினைவில் நிறைவு

✲ B. தேவதாஸ்
மருதனாமடம்.

அந்த நர்ஸிங் ஹோம் ஒரு கிறிஸ்தவ பெரியாரின் ஞாபகார்த்தமாகத் திறக்கப்பட்டது. அங்கு கிறிஸ்தவ வைத்தியர்கள், தாதியர் சேவை செய்து வந்தாலும் எல்லா மக்களுக்கும் மதவேறுபாடின்றி சேவை செய்வதில் முன்னணி வகுத்தது.

அங்கே டாக்டர் நத்தானியேல் நோயாளிகளைப் பராமரித்துக்கொண்டிருந்தார். சிறுபிள்ளைகள் ஊசிபோட்ட வலியினால் ''ஆ...ஊ...'' என்று சத்தங்களை எழுப்பிக்கொண்டிருந்தார்கள், அவர் அந்தச் சிறுவர்களின் முதுகைத் தடவும்போது அவரின் கண்ணீர் அவரின் கதை சொல்கிறது.

அவரும், தாயை இழந்த மகனுமாக, இருவரும் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். தனது மழலைச் சிறுவனின் மழலை மொழிகளைக் கேட்கும்போது, தனது மனைவியை இழந்த கவலை அவரை விட்டு அகன்று போனது. காரிலே தான் நர்ஸிங் ஹோமுக்குப் போகும் போது மகனைப் பாடசாலையருகில் இறக்கிவிட்டுப் போவார்.

ஒருநாள் சிறுவன் பாடசாலையருகில் இறங்கி உள்ளே போய் தனது பாடங்களை படிக்க ஆரம்பித்தான். திடீரென குண்டுமாரி...... பாடசாலை ஒருபக்கம் தரைமட்டமானது ... அவனதும் வேறு சில பிள்ளைகளினதும் உடல்கள் பஞ்சாய்ப் பறந்தன. செய்தி கேட்டு ஓடிவந்து மகனைத் தூக்கிக்கொண்டு போய் நர்ஸிங் ஹோமில் வைத்து சிகிச்சை செய்து, மரணத்தை வெல்ல நினைத்த அவரை மரணம் வென்றது. அழுதார் நத்தானியேல். அதைத் தவிர அவரால் என்ன செய்ய முடியும்?

இதன் பின்னர் அவருக்கு எந்த சிறுபிள்ளையைப் பார்த்தாலும் தனது பிள்ளையின் நினைப்பு வரும். ''மகனே, மகனே'' என்று கூப்பிடுவார். சிறுபிள்ளைகளுக்குச் சேவை செய்வதை முற்று முழுதாக விரும்பி அதையே செய்து வந்தார். அதனால் ஆறுதல் அடைந்தார்.

வைத்தியசாலையில் ஒரு நாள், திடீரென ஓடிவந்தாள் தாதி ஒருத்தி. ''டாக்டர் நாம் ராஜா என்கிற ஒரு வாலிபனை வச்சுப் பராமரிச்சோமில்லையா...அந்த வாலிபனின் எதிர் ஆட்கள் துவக்குகளோடை வரீனம். எல்லா டாக்டர்களும் நர்ஸ்மாரும் ஓடீட்டினம். நீங்களும் ஓடித் தப்புங்கோ. ஆத்திரத்தோடை வரீனம். நானும் போறன்'' என்று கூறியபடியே ஓடுகின்ற அவளை ஏதோ வேடிக்கைப் பொருளைப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர் நத்தானியேல். தனக்குள் சிரித்துக் கொண்டார். ''...இல்லை...இல்லை...இந்தச் சிறு பிள்ளைகளை விட்டுவிட்டு நான் ஓடமாட்டேன். இந்தச் சிறு பிள்ளைகளை விட்டு நான் ஓடினால் ''கிறிஸ்தவன்'' என்ற சொல்லுக்கே பொருளில்லை, வருவது வரட்டும்'' என்று எண்ணி தன் மனதைத் திடப்படுத்திக்கொள்கிறார். திடீரென சில பாத அடிகளின் சத்தம் கேட்டது. வர வர பெரிதாகி யாரோ சிலர் நடந்து வருவது தெரிந்தது.

திடீரென துப்பாக்கிகளுடன் வந்து நின்ற சில உருவங்கள் அவரது சிந்தனையைக் கலைத்தன. ''டாக்டர் எசேக்கியேல் எங்கே?'' ''எனக்குத் தெரியாது'' ''ஒன்றாக வேலைசெய்யுறீங்கள்...பிறகு தெரியாது எண்டு சொல்றியே எங்கே?'' ''தம்பி எனக்குத் தெரியாது'' மறுபடியும் இதே பதில்தான். துப்பாக்கியிலிருந்து வந்த தோட்டா அவரது வலதுபக்க முழங்கையைப் பதம் பார்த்தது. ''இனியும் சொல்லாட்டா... மற்றக் கையும் இல்லாமல்போய்விடும். ம்...சொல்...'' திரும்பவும் ஒரு குரல். ''தெரியாது'' அதே பதில். மயங்கி விழுந்தார் டாக்டர் அவர்கள். ''வாங்கடா போவோம்'' அனைவரும் அகன்றனர்.

ஓடிய டாக்டர்கள், நர்ஸ்கள் அனைவரும் திரும்பி வந்து அவரது மயக்கத்தை தெளிவித்தார்கள். வைத்தியர்கள் தாதிகள் அனுதாபப்பட்டனர். ''எத்தனை பெற்றார்கள் எங்களை நம்பி தங்கள் குழந்தைகளை இங்கே அனுமதித்திருக்கிறார்கள். வாழவேண்டிய இந்தப் பச்சிளம் பாலர்களை விட்டு விட்டு நானும் ஓடிவந்திருந்தேனேயாகில் அவர்கள் தங்கள் கோபத்தை இந்த அப்பாவிகளிடம் தீர்த்திருக்கலாம். நான் முன்னுக்கு இருந்தபடியால் என்மீது தங்கள் கோபத்தைத் தீர்த்துக்கொண்டார்கள். என்னாலே இக்குழந்தைகள் காப்பாற்றப்பட்டதையிட்டு நான் பெருமகிழ்வு கொள்கிறேன்.'' என்றார். ''என்னால் இயன்றவரை இவர்களுக்காய் பாடுபடுவேன்.'' ''நான் கோழையல்ல'' என்பது போன்ற அவரது பேச்சினால் அனைவரும் வெட்கித் தலை குனிந்தனர். திடமாக அவர் சொன்னதாவது: ''எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.''

(பிலிப்பியர் 4 : 13)

நீ உன் நெஞ்சுக்கு நேராக உன் கையைத் திருப்பி ''நான் கிறிஸ்தவன்'' என்று சொல்வதைப் பார்க்கிலும், மற்றவர்கள் உன் நெஞ்சுக்கு நேராக தங்கள் கையை நீட்டி ''இவன் கிறிஸ்தவன்'' என்று சொல்லும்படியாய் வாழ்ந்திடு.

நீர்கொழும்பில் 100 ஆண்டு பழமை வாய்ந்த

# தமிழ் பாடசாலை ஒன்றின் "மூடல் விழா"

## கண்ணீர் அஞ்சலி

கலையகமே கலையகமே
முன்னக்கரை(த்) தமிழ்(க்) கலையகமே
கல்விமான்கள் பலநூறை
தோற்றுவித்த தமிழ்க் கலையகமே.

1. நூறாண்டு காலமாக
உன் புகழ் உச்சி யேற
பொறாமை கொண்டுதானோ
உன் கழுத்தை நெரித்திட்டார்.

2. ஆசிரியர் திலகங்களும்
அருட் பணிகள் புரிவோரும்
தேசத்தில் உயர் பதவி
பெற்றுச் சேவை செய்வோரும்

3. ஆயர்குழு தலைவராம்
பேராயர் தாமும் கூட
ஆசையுடன் (உன்) மடிதவழ்ந்து
அழகு தமிழ் கற்றவராம்

4. யேசுவின் சொல் எழுதி
நேசித்தே பாலர்களை
ஆனந்தமாய் அரவணைத்த
கலையகமே நீ எங்கே!

5. கட்டிடம் தமை உடைத்து
நெட்டி முறியஉனை சிதைத்து(த்)
திட்டமுடன் செயற்பட்டனரோ
திருப்பணிதாம் புரிவோரும்

6. கலையகமே! கலையகமே!
என்று கூறிக் கதறுகிறேன்
கவலையுடன் உன் நிலத்தைப்
பார்த்துப் பார்த்துக் கடக்கின்றேன்

7. கண்ணிருண்டு போகுமட்டும்
காட்சியாக வைத்திருப்பேன்
காலன் என்று வருவானோ!
அன்று அமைதி பெறுவேனே.

உன்குழந்தைகளில் ஒருவன்
● முன்னக்கரை நீக்குலாஸ்.

# திருமறை அறிவை வளர்ப்போம்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தைக்குச் சமமானவரென்றும் கூறினார். பிதாவின் சித்தத்துக்குத் தாம் முற்றும் உட்பட்டிருப்பதாகவும், அவரது சித்தத்தை நிறைவேற்றுவதே தமது உணவு என்றும் அவர் கூறியுள்ளார்.

7. அவரது வாழ்வு முழுவதும் அவரது பணியையே மையமாகக் கொண்டிருந்தது. அவர் அன்புடனும், பணிவுடனும் அதை நிறைவேற்றினார். ''பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும்'' (மத் 20:28) தாம் வந்ததாகக் கூறியுள்ளார். ''தன் ஆடுகளுக்காகத் தன் உயிரையே கொடுக்கும் நல்ல ஆயனாக (அரு 10 : 11) தம்மை வர்ணித்ததுடன், மீண்டும் புதியதொரு பயிராக முளைத்தெழுந்து மிகுந்த பலன்கொடுக்கும் படியாக நிலத்தில் விழுந்து மடியும் கோதுமை மணியின் அழிவுக்கு தமது மரணத்தை ஒப்பிட்டுள்ளார்.

8. தமது வாக்கினாலும், போக்கினாலும் தற்பெருமை கொண்ட தமது நாட்டு மதத்தலைவர்களைப் புண்படுத்தியதால் அவர்கள் அவரைக் கொன்றுவிடத் தீர்மானித்தனர். இயேசு இதை அறிந்திருந்தாராயினும், தமக்கு ஏற்படவிருந்த உயிராபத்திலிருந்து தப்புவதற்கு அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இறுதியில் அந்த நாளும் வந்தது. அவர் கைது செய்யப்பட்டு உரோமை ஆளுநன் போஞ்சியு பிலாத்துவிடம் கையளிக்கப்பட்டார். பிலாத்து வலிமையற்ற ஆட்சியாளன். இயேசுவை அவமானமான சித்திரவதைக்கும் சிலுவை மரணத்துக்கும் தீர்ப்பிடுவதன் மூலம் சக்கரவர்த்தியின் நல்லெண்ணத்தைப் பெற முயன்றான். சிலுவையில் தொங்கும் போது இயேசு தமது இறுதி மூச்சில் இறைவன் கையில் தம்மை ஒப்படைத்து தம்மைக் கொலை செய்தவர்களை மன்னித்தார். மரணதண்டனை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாயிருந்த உரோமைப் படைத்தலைவன் அவர் இறந்ததைக் கண்ட போது ''உண்மையாகவே இவர் கடவுளின் மகன்!'' என்று கூறினான். (மத் 27 : 54)

9. இயேசுவின் சீடர் சிலர் அவரது உடலை அடக்கம் செய்ய ஆளுநனிடமிருந்து அனுமதி பெற்றனர். அவரது கல்லறை உரோமைப் படைவீரரால் கண்டிப்பாகக் காவல் செய்யப்பட்டது. ஆயினும், அவர் இறந்து மூன்று நாட்களின் பின் கல்லறை வெறுமையாயிருக்கக் காணப்பட்டது. தாம் வாக்களித்தபடியே உயிர்த்த இயேசு, பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது சீடருக்குக் காட்சியளித்தார். இச்சீடர்கள் அவரைத் தம் கண்களால் கண்டதாகவும், தம் கைகளால் தொட்டதாகவும் சான்றுபகர்ந்தனர். பின்பு, உலகில் வெளிப்படையான அவரது பணி பூர்த்தியானதும் ஒரு நாள் அவர்கள் கண்முன்பே வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்று, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்தார். காலத்தின் முடிவில் தாம் வாக்குப்பண்ணியபடியே மீண்டும் மகிமையோடு வந்து, தாம் விதைத்த மணியின் பயனை அறுவடை செய்து ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்ந்த வாழ்வுக்கேற்ப பேறுகளை அளிப்பார்.

10. இயேசுவினது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளும் அவரது போதனைகளும் அவரதுசீடரால் நான்கு நற்செய்தி நூல்களில் எமக்கு அளிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் இவை புதிய ஏற்பாட்டு நூல்களுள் மிகப் பெறுமதி வாய்ந்தவையாகும். இயேசுவைப்பற்றி அவரது அப்போஸ்தலர்கள் அளித்த செய்தியும் சாட்சியமும் இவற்றுள் அடங்கியுள்ளன. நற்செய்திகளின் மூலம் இயேசு ஆள்வடிவத்தில் தொடர்ந்து வாழ்கிறார். வரலாற்றில் முனைப்பாக இடம் பெறுகிறார். தம்மையும் தமது பணியையும் குறித்து ஒரு நிலைப்பாடு எடுக்கும்படி ஒவ்வொருவரையும் அழைக்கிறார். 'நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?'' (மத் 16 : 15) எனத் தம் சீடரிடம் கேட்ட அதேகேள்வியை இவர் களிடத்திலும் கேட்கிறார்.

## இறை இரக்கத்தின் பெருவிழா

இறைவனின் இரக்கத்தைப் பெற யேசு சங். சகோதரி பவுஸ்தீனாவுக்குக் கற்பித்த வழிகளில் இறை இரக்கத்தின் பெருவிழாவும் ஒன்று.

இப்பெருவிழா, உயிர்ப்பு விழாவை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப் படுகிறது.

இம்முறை எதிர்வரும் சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் வரும் இப்பெருவிழாவிற்குரிய நவநாள் பெரிய வெள்ளிக் கிழமை ஆரம்பமாகின்றது.



நாட்டில் அமைதி நிலவ, உரிமையோடு கூடிய வாழ்வு பிறக்க, ஆன்ம வளம் பெருக வேண்டுவோமாக!

## 1ஆம் ஆண்டு நினைவு



யோ. எட்வேட் அரியகுட்டி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13-10-1911 | 12-04-1992 |

## 4ஆம் ஆண்டு நினைவு

அ. சிப்பிரியன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26-09-1908 | 10-04-1989 |

''ஆண்டவரே, நித்திய சாந்தி அளித்தருளும்.நீர் இவர்களின் பரிசாய் இருந்தருளும்''

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-04-93 காலை 6-15மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பாசமுடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்
35/2, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம் A/7/93

## யார் இந்த...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படலாம் என அஞ்சி அதனை மீட்டெடுத்து லூசன்னே (Lousanne) என்னும் இடத்தில் மலைகளுக்கிடையில் புதைத்தனர். பிலாத்துவின் கல்லறை வியன்னாவில் இருப்பதாகவும்கூறப்படுகிறது. லூசன்னே என்ற இடத்தில் ''பிலாத்து மலை'' என்று ஒரு மலையும் உண்டு. உண்மையில் அம்மலை பிலேற்றுஸ் (PILEATUS) என்பதாகும். இது பிலாத்துவுடன் இணைக்கப்பட்டு பிலாத்து மலையாகி விட்டது.

பின்னர் கிறிஸ்தவ பாரம்பரியத்தின்படி எல்லாப் பழியும் யூதர்களின்மேல் போடப்பட்டு கிறிஸ்துவின் மரணத்தில் பிலாத்துவுக்கிருந்த பழி நீக்க முயற்சிக்கப்பட்டது. இதன் ஒரு அங்கமாக பிலாத்துவின் மனைவி குளோடியா பிரோகியூவாவுடன், பிலாத்து கிறிஸ்தவர்களாக மனம் மாறியதாகவும் கூறப்படுகிறது. இன்றையவரையும் கொப்ரிக் (Coptic) சபை இருவரையும் புனிதர்களாக கொள்கின்றது.

எது எப்படியாயினும், இத்தகைய ஒருவனைத்தான் இறைவன் தன் மீட்புத் திட்டத்தில் ஒரு முக்கிய பங்கேற்கும்படி தெரிவு செய்து அவனை தன் கருவியாக்கி அவன் அதிகாரத்தில் தன் திருமகனை அவமானம் மிக்க சிலுவையில் பாவ நிவாரண பலியாக்கினார் என்பது வரலாற்றில் மறுக்கப்படாத ஒன்றாகும்.

எம். என். நவரட்ணராஜா

விண்ணக வாழ்வின்

## 10ம் ஆண்டு நினைவு

சவரிமுத்து போல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03-09-1896 | 17-04-1983 |

''நானோ வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக் காண்பேனென நம்புகிறேன்.
(சங். 26-13)

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
A/8/93

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 7 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 7 | எம் வாழ்வின் வழி யேசு |

## அம்மா

(1) ''அம்மா! இதோ உன் மகன்''

அம்மா, அம்மா, அம்மா என்று உதடுகள் இன்றுவரை எத்தனை தடவைகள் அழைத்திருக்கும்.

உணவுக்காக அம்மா! உடைக்காக அம்மா! நோ பட்டால் அம்மா! அம்மாவென்ற அமுதமொழியின் சக்திதான் என்னே!

இறைமகனை கருவாக ஏற்றது கொண்டு கல்வாரியில் கழுவில் மரித்ததுவரை 33 ஆண்டுகள் அம்மாவின் பங்களிப்பு எத்தகையது என இவ்வேளை சிந்தியுங்கள்.

பெர்ய வியாழன், பெரிய வெள்ளிச் சிந்தனைகளுடன் எம் மண்ணில் எம் அம்மாக்கள் படும் துன்பங்களை ஆண்டவனின் அம்மாவின் வேதனையுடன் இணைத்துச் சிந்தியுங்கள். யூதாசின் துரோகத்தனம், இராயப்பரின் கோழைத்தனம், பணிகள் பெற்ற மக்களின் வெது வெதுப்பான போக்கு இத்தனையும் அம்மாவின் இதயத்தை இறுக்கி, இரத்தக்கசிவை ஏற்படுத்தியிருந்தாலும் இறைதிட்டத்தை நன்குணர்ந்த அம்மா மகனைக் காண விரைந்து சென்றாள். மகனின் பரிதாபமான கோலத்தைக் கண்டு உள்ளம் வேதனைப்பட்ட வேளையிலும் ஆன்ம பலத்துடன் மீட்புப்பாதையில் கல்வாரிவரை தொடர்ந்து சென்றாள்.

முள்முடி, அடிபட்டு, இடிபட்டு கிழிந்த உடல், மூன்று ஆணிகளால் துளைக்கப்பட்ட கைகள், கால்கள், இந்தக் கோலத்தைக் கண்டும் அம்மா மௌனமாகவே நின்றாள். இறை சித்தத்தை இதயத்தில் ஏற்றாள்.

இறைமகன் பூமிக்கும், வானத்துக்கும் நடுவே நின்று, மண்ணில் நின்ற மாதாவைப் பார்த்து;

''அம்மா! இதோ உன் மகன். இதோ உன் தாய்,'' என்று தான் அன்புசொரிந்த சீடன் அருளப்பரை ஒப்படைத்தார். அன்றே!

அம்மா எங்களைக் கல்வாரி அடியில் பொறுப்பேற்றாள். வாருங்கள் நாங்களும் அம்மாவிடம் செல்வோம். அம்மா பற்றி தொடர்ந்து எழுதுவேன். தொடர்ந்து படியுங்கள். பலன் பெறுவீர்கள், பலமும் பெறுவீர்கள்.

அன்பின், அன்பு விழி

## சோதனையின் வேதனை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேல்'' எனத் துணிந்தேன். உறுதியான தீர்மானத்துடன் பாடசாலையை அடைந்தேன்.

ஆசிரியரிடம் நடந்த யாவற்றையுங் கூறமுன்னர் எனக்கு உடலெல்லாம் வியர்த்து விட்டது. ஆனாலுந் தட்டுத் தடுமாறிக் கூறி முடித்தேன். அப்போது அவர் ஒரு மாதிரியான சிரிப்போடு சொன்னார், ''புத்தகம் எனக்கு ஒன்றுமில்லை. நீ திருப்பித் தருவாய் என்றுதான் நான் அடிக்கடி கேட்டனான். தொலைந்து விட்டது எனச் சொல்லியிருந்தாற் கேட்டிருக்கவே மாட்டேன் தம்பி'' அவரது அந்த முறுவலை என்னால் இப்போதும் மறக்க முடியாது.

'நன்றி சேர்' என்று அடித்தொண்டையால் முணுமுணுத்துக்கொண்டு தலைகுனிந்தபடி 'திரும்ப' எத்தனித்த என்னை கையில் தொட்டு நிறுத்தி, ''உனக்கு அந்தப் புத்தகத்தைத் தந்த அன்று மதியம், கல்லூரிக்கு நான்திருப்பி வந்து கொண்டிருந்தபோது, ஆறாம் ஆண்டில் படிக்கும் ஒரு சிறுவன் அந்தப் புத்தகத்தைக் கையில் பிடித்துக்கொண்டு எதிரே வந்தான். எப்படி அது அவனுக்குக் கிடைத்தது என்று கேட்டபோது, அது 'பிளே கிறவுண்டுக்கு' மூலையிலே மகிழ மரத்தடியில் கிடந்து எடுத்தனான்' என்று சொல்லி என்னிடம் தந்தான், அவன் அதைக் கொடுத்துக் கடலை வாங்கக் கொண்டு போனானாம்'' இப்படிச் சொல்லிக் கொண்டே மெல்ல மேசையின் இழுப்பறையைத் திறந்து புத்தகத்தை வெளியில் எடுத்துக் காட்டிச் சிரித்தார்.

அப்பொழுதுதான் உண்மை எவ்வளவு ஒளிமயமானது என்பதை உணர்ந்து கொண்டேன். உண்மை பேசியிருந்தால் உள்ளத்தில் மகிழ்வு இருந்திருக்கும். மனதிற் சஞ்சலம் இருந்திராது. சத்திய நெறி நிற்கையிலே நெருப்பிலே போட்டுச் சுட்டகலும் மகிழ்வுதான்-நிறைவுதான். ஆனால், மனதில் அச்சம் விரவியிருக்கும் போது தொட்டாலே சுருங்கிப் போய் விடுவோம். அச்சமே எம்மைப் பொய்பேச வைக்கிறது, பொய் பேசாதவன், அல்லது சொல்லியிருந்தாலும் உணர்ந்து திருந்தியவன் நிமிர்ந்த நன்னடையோடும். கம்பீரத் தோற்றத்தோடும். அஞ்சாத விழியோடும், வளையாக் கழுத்தோடும் நிற்கலாம்-என்னைப்போல.

'' தன்னெஞ்சு அறிவது
பொய்யற்க;
பொய்த்தபின் தன்னெஞ்சே
தன்னைச் சுடும்.''

★ ★ ★

"காவலன்" வாசக
அன்பர்களுக்கு
எமது உளம் கனிந்த
## பாஸ்கா — புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!
" சமாதானம் உங்களோடு இருப்பதாக."

## போற்றுகிறோம்! வாழ்த்துகிறோம்!!



கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும்
கம்பன் கழகம்
முதன் முறையாக 02-04-1993
வெள்ளியன்று வழங்கிய
இவ்வாண்டு (1993)க்கான
"மகரயாழ் விருது"
பெற்ற
வைத்திய கலாநிதி
திரு. சபாரத்தினம் சிவகுமாரன்
*M. D., F. R. C. P.*
அவர்களுக்கு
"காவலன்" தன் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறான்.

## திருக்குடும்ப கன்னியர் சபையின்
# யாழ். மாகாண சங்கம்

யாழ் மாகாண திருக்குடும்பக் கன்னியர் சபையின் மாகாணச் சங்கமானது 4-4-93 தொடக்கம் 14-4-93 வரை யாழ் திருக்குடும்ப சபையின் தலைமை இல்லத்தில் நடைபெறுகின்றது.

யாழ் மாகாண இல்லங்களின் பிரதிநிதிகளான 35 கன்னியர் தங்களது ஆன்மிக வாழ்வைப் புதுப்பித்தல், காலத்திற்கேற்ற அப்போஸ்தல வாழ்வின் மறுசீராய்வு ஆகியவற்றைக் குறித்து ஆய்வுகள் நடத்தி, தமது அப்போஸ்தல பணிக்குரிய புதிய திட்டங்களை அமைக்கு முகமாக மாகாணத்தலைவி அருட்சகோதரி மாறி ஜோசவ் தலைமையில் ஒன்றுகூடியுள்ளனர். அருட்தந்தை ஜீவா போல் அ.ம.தி. அவர்கள் சங்கத்தின் வழிநடத்துநராக இருக்கின்றார்.

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சங்கத்தினை ஆரம்பித்து வைத்து ஆசியுரை வழங்கினார்.

## மறை ஆசிரியர்க்கான சான்றிதழ் நிகழ்வு
# மீட்பின் நற்செய்தியை சுமந்து செல்லுங்கள்
— யாழ். ஆயர்

"இறைவனின் சாயலினால் முத்திரையிடப்பட்டு, மீட்பின் நற்செய்தியை சுமந்து சென்று எல்லா வேளைகளிலும் இறை வார்த்தையை பகிர்ந்தளிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுபவர்கள் நீங்கள்," என்று யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கூறினார்.


கடந்த மூன்று மாதகாலமாக யாழ். மறைக்கல்வி நிலையத்தில் பயிற்றப்பட்டு மறை ஆசிரியராக, வேத நூலைக் கையிலேந்தி, 03-04-93 சனி அன்று தங்களை அர்ப்பணம் செய்த புதிய 46 மறை ஆசிரியர்க்கென மறைக் கல்வி நிலையத்தில் நிறைவேற்றப் பெற்ற திருப்பலி வேளையில் ஆற்றிய மறையுரையில் ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து நடந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்விலே, அருட்செல்வி அழகேஸ்வரி வரபுரையாற்ற, யாழ். மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை R. H. சகாயநாயகம் அடிகள் பயிற்சி அறிக்கை வாசித்து, மறை சாட்சிகளாய் வாழ அறிவுரையும் வழங்கினார். பயிற்சி பெற்றோர் சார்பில் செல்வி செ. யசிந்தா கருத்துச் செறிந்த ஒரு கவிதைபாடி தங்கள் அநுபவங்களைப் பகிர்ந்தார்.

புதிய மறை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கிய யாழ். ஆயர், சோர்வடையாது, தயக்கமின்றி தாங்கள் பெற்ற ஆரம்ப அறிவை தொடர்ந்து விருத்தி செய்து, தங்கள் சொந்த வாழ்க்கையை வளம் படுத்தி, திருச்சபையின் படிப்பினைகளைப் போதிக்க புதிய மறை ஆசிரியர்களை உற்சாக மூட்டினார்.

கலை நிகழ்ச்சிகளுடன் இந் நிகழ்வு நிறைவெய்தியது.

# அருட்தந்தை சாள்ஸ் செந்தில்வேல் அ. ம. தி. கொழும்பில் காலமானார்



அருட் திரு. சாள்ஸ் குணம் செந்தில் வேல் அ. ம. தி. அடிகளார் கடந்த 31-03-93 புதன் கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் பூதவுடல் வெள்ளவத்தை புனித லோறன்ஸ், மருதானை பத்திமா ஆலயங்களில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, சனிக்கிழமை காலை இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்பெற்று கனத்தை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறைபதம் அடைந்த அருட்தந்தை சாள்ஸ் செந்தில்வேல் காலி பெலியத்தவில் 7-4-1928 இல் பிறந்தார்: யாழ்ப்பாணத்தில் 29-05-32 இல் திருமுழுக்குப் பெற்றார்.

காலஞ்சென்ற வண. C. S. மத்தியூஸ் அ. ம. தி. அடிகளாரின் அரவணைப்பில் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்று, அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்து, கொழும்பில் 03-10-53 இல் பேராயர் (கர்தினால்) தோமஸ்கூறே ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் தனது குருத்துவப் பணியை ஆரம்பித்து வெள்ளவத்தை புனித றோறன்ஸ் ஆலய உதவிப் பங்குக் குருவாகவும், கொழும்பு வைத்தியசாலை ஆன்ம குருவாகவும் சேவையாற்றிய பின்னர், 1957 லிருந்து கொழும்பு அக்குவைனாஸ் பல்கலைக்கழகத்தில் நிதிப் பொறுப்பாளராக 5 வருடங்களுக்கு மேல் அரும்பணியாற்றினார். அதன் பின் போளவளானவிலும்கொழும்பு பேராலயத்திலும் உதவிப் பங்குக் குருவாயிருந்து, அம்பிற்றியா தேசியகுருமடத்தில் 4வருடங்கள் நிதிப் பொறுப்பாளராக ஏப்ரில் 1967 மட்டும் எல்லோரினதும் பாராட்டுகளைப் பெற்று வாழ்ந்தார்.

1974 ஒக்ரோபர் இல், யாழ் மறைமாவட்டத்தில் முருங்கன் உயிலங்குளப் பங்குத்தந்தையாய் பொறுப்பேற்கமுன், மக்கோனா புனித வின்சன்ற் இல்லத்தின் அதிபராக 3 வருடங்களும், பளங்கத்துறை, கடற்கரை வீதி-நீர் கொழும்பு பங்குத் தந்தையாகவும் கடமை புரிந்தார்.

1976இல் மடுத்திருப்பதிப் பரிபாலகராக நியமனம் பெற்ற இவர், இத்திருப்பதியின் தற்போதைய முன்னேற்ற நிலைக்கு மூலகாரணமாயிருந்தாரென்றால் மிகையாகாது.

1982இல் யாழ் புனித யுவானியார் பங்கிலும், 1988 நாவாந்துறைப் பங்கிலும் பங்குத் தந்தையாய் கடமையாற்றும் வேளையிலும், 9 வருடங்கள் வட மாநில அ. ம. தியாகிகளின் நிதிப்பொறுப்பாளராக விருந்தார்.

ஆழ்ந்த இறைப்பற்றும், மரியன்னைமேல் பாசமுமுடைய இவர், உயரிய மனித நேயத்துடன் தன் கடமைகளை மிகவும் பிரமாணிக்கத்துடனும் விவேகத்துடனும் நிறைவேற்றி எல்லோரினதும் மனங்களைக் கவர்ந்தார்.

கடந்த 5 வருடங்கள் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் 7சத்திரசிகிச்சைகளுக்குட்பட்டு இன் முகத்தோடு இறைச் சித்தத்தை ஏற்று, தான் அனுபவித்த சொல்லணாத் துன்பங்கள் மத்தியிலும் பிறர் மகிழ்வுக்காக வாழ்ந்த அடிகளாரின் ஆன்ம சாந்திக்காக நம் செபங்களில் என்றும் நினைவு கூருவோமாக.

## திங்கள் - 12-04-93-மாலை 5 மணி
## இரங்கல் திருப்பலி

எதிர்வரும் திங்கள் 12-04-1993, மாலை 5 மணிக்கு
கொழும்பில் காலஞ்சென்ற
அருட்தந்தை சாள்ஸ் செந்தில்வேல் அ. ம. தி. அடிகளாரின் ஆன்ம சாந்திக்காக யாழ். ஆயரின் தலைமையில் யாழ். பேராலயத்தில் நடைபெறும் இரங்கல் கூட்டுத் திருப்பலியில் கலந்துகொள்ளுமாறு குருக்கள், துறவியர், பொது நிலையினர் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பரிசுத்த வாரத்துக்குள் மக்களைப் புகுத்தும்
# "பலிக்களம்"

யாழ் திருமறைக் கலாமன்றம் ஏப்ரில் மாதம் 1 ஆம் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் திகதிகளில் ''பலிக்களம்'' என்னும் பக்தி. இசை, உரைச்சித்திரத்தினை பெருமையுடன் வழங்கியது.

நேரந் தவறாமல் 6.45மணிக்கு மேடையேறிய நிகழ்ச்சி ஒரு குரவர் அருளுரை வழங்க, ஆண்டவரின் பாஸ்கா பவனியுடன் ஆரம்பமாகி, உயிர்ப்புடன் முடிவடைந்தது.

இறைமகன் யேசுவாக நடித்தவர் தன் உணர்ச்சியான நடிப்பால் பாத்திரத்திற்கு மெருகூட்டியது மட்டுமல்ல, மக்களையும் கண்ணீர்க்கடலில் ஆழ்த்தி விட்டார்.

இராயப்பர், யூதாஸ், பிலாத்து, அன்னாஸ், கைப்பாஸ் இவர்களின் நடிப்பும் திறமையாக இருந்தது.

பணிப்பெண், வானதூதர் போன்ற உப நடிகர்கள்கூட தங்கள் தங்கள் பங்கை வெளிப் படுத்தியிருந்தார்கள்.

ஒளி – ஒலி – இசையமைப்பு உரைச் சித்திரத்திற்கு மேலும் மெருகூட்டின. நெறியாள்கை மெச்சக்கூடியது,

நெஞ்சையுருக்கும் சோக கீதங்களுள் ''யார் நீர் இறைவா?'' ''முத்து முத்தான இரத்தம்'' போன்ற பாடல்கள் இதயத்தைத் தொட்டன.

ஆண்டவரின் உயிர்ப்பு வேளையிலே ஆண்டவரைச்சூழ 62 வானதூதர்கள் காட்சியளித்தமை நாம் இருப்பது சொர்க்கத்திலா என்ற பிரமையை உண்டாக்கியது.

மொத்தத்தில் 'பலிக்களம்'த்தை வழங்கிய திருமறைக் கலா மன்றத்தினர் பாராட்டுக்குரியவர்களே!

பரிசுத்த வாரத்தில் நம் சிந்தனைகளை நல்வழிப் படுத்தி, ஆன்மாவை இறைவன் பால் எழுப்பி, வாழ்வில் பயனடைய இப் 'பலிக்களம்' நம்மை அழைக்கிறது என்பதை உணர்ந்து பலன் பெறுவோம்.

● L. R. சூசைப்பிள்ளை

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81